# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

### THE HINDU DATED 06.05.2025

# Varsity launches research methodology course to promote indigenous perspectives in scholarship

**The Hindu Bureau**
PUDUCHERRY

Pondicherry University recently launched a 10-day research methodology course to promote indigenous perspectives in scholarship.

The research methodology course has been designed by the Centre for Study of Social Inclusion (CSSI), School of Social Sciences and International Studies, in collaboration with the Institute for Educational and Development Studies (IEDS) under the Indian Council of Social Science Research, New Delhi.

During the launch of the course, Dhananjay Singh, Member-Secretary, ICSSR, underscored the role of interdisciplinary and trans-disciplinary research in addressing social issues and promoting community development.



P. Prakash Babu, Vice-Chancellor, Pondicherry University, speaking at the launch of the 10-day research methodology course. SPECIAL ARRANGEMENT

Mr. Dhananjay also highlighted the importance of methodological rigor, social realism, and "Nyaya philosophy" in research.

In his presidential address, P. Prakash Babu, Vice-Chancellor, Pondicherry University, stressed the relevance of the Indian knowledge systems in contemporary research, and pointed out the continued significance of offline (field-based) research, especially in social science disciplines, and its role in building contextually grounded knowledge.

**Critical research**

Sudhakar Venukapalli, Honorary Professor, IEDS, highlighted the significance of critical and original academic research and the need to decolonise intellectual frameworks and rediscover the roots of the Indian knowledge system.

K. Tharanikkarasu, Director of Studies, Education, Innovation, & Rural Reconstruction, Pondicherry University, in a special address, discussed the differences between Western and Indian approaches to research.

Biju K.C. of Christ University, Bengaluru, urged budding scholars to pursue strong and meaningful research.

A. Chidambaram, Centre Head of CSSI, Pondicherry University; G. Prabakaran, Course Director; and Anchal Kumari, Assistant Professor, CSSI, were also present.

### MALAI MALAR DATED 06.05.2025

பாரம்பரிய மருத்துவத்தை வலுப்படுத்த

# புதுவை பல்கலையுடன், ஆயுஷ் இயக்ககம் ஒப்பந்தம்

புதுச்சேரி,மே.6—

ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு மற்றும் பாரம்பரிய மருத்துவம் உள்ளிட்ட துறைகளில் கல்வி மற்றும் தொழில்துறை ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கத்தில், புதுவைப் பல்கலைக்கழகம் மற்றும் அயுஷ் இயக்ககம், மருந்துகளின் கட்டுப்பாட்டு துறை, புதுச்சேரி அரசு ஆகியவை புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. புதுவை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் புதுவை பல்கலைக்கழக துணை வேந்தர் பிரகாஷ் பாபு, அயுஷ் இயக்குநர் டாக்டர் ஸ்ரீதரன் ஆகியோர் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தம் கல்வி மற்றும் தொழில்துறை, ஒழுங்குமுறை அமைப்புகளுக்கு இடையிலான இணைப்பை வலுப்படுத்தும். இது இந்தியா மற்றும் உலகளவில் சுகாதாரத் துறைக்கு நீண்டகால பலன்களை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

THE NEW INDIAN EXPRESS DATED 06.05.2025

# Pondy univ signs MoU with AYUSH, drugs control dept

PUDUCHERRY: Pondicherry University has signed a tripartite Memorandum of Understanding (MoU) with the Directorate of AYUSH and the Department of Drugs Control, Government of Puducherry.

The MoU aims to foster collaborative research in drug discovery, traditional medicine (AYUSH), pharmaceuticals, and regulatory science. P Prakash Babu, vice-chancellor of Pondicherry University, said, "This partnership represents a vital synergy between academic excellence and regulatory expertise. It empowers our faculty and students to engage in impactful research aligned with national healthcare priorities, particularly in Ayurveda, Yoga & Naturopathy, Unani, Siddha, and Homeopathy." Dr R Sridharan, director of AYUSH and CEO of the State Medicinal Plants Board, highlighted the collaboration's practical value. "By integrating our regulatory infrastructure with the university's research capabilities, we can accelerate the development of effective healthcare solutions rooted in traditional medicine," he said. *ENS*

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

DAILY THANTHI DATED 06.05.2025



### ஆராய்ச்சி, கண்டுபிடிப்புகளை மேம்படுத்த

# பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

புதுச்சேரி, மே.6-

புதுவையில் ஆராய்ச்சி, கண்டுபிடிப்புகள் மற்றும் பாரம்பரிய மருத்துவம் ஆகியவற்றை மேம்படுத்தப்பட உள்ளது. இதற்காக புதுவை பல்கலைக்கழகம், ஆயுஷ் இயக்ககம் மற்றும் மருந்துகளின் கட்டுப்பாட்டு துறை இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று கையெழுத்தானது. நிகழ்ச்சியில் புதுவை பல்கலைக் கழக துணை வேந்தர் பிரகாஷ்பாபு, ஆயுஷ் இயக்கத்தின் இயக்குனர் மற்றும் மாநில மூலிகைத் தாவரங்கள் வாரியத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான டாக்டர் ஸ்ரீதரன், மருந்துகள் கட்டுப்பாட்டு துறையின் உரிமம் வழங்கும் அதிகாரி டாக்டர். ஆனந்தகிருஷ்ணன் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த ஒப்பந்தம் கல்வி மற்றும் தொழில்துறை, ஒழுங்குமுறை அமைப்புகளுக்கு இடையிலான இணைப்பை வலுப்படுத்தும் ஒரு முக்கிய முன்னேற்றமாக கருதப்படுகிறது. இது இந்தியா மற்றும் உலகளவில் சுகாதாரத் துறைக்கு நீண்டகால பலன்களை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

DINAKARAN DATED 06.05.2025

# புதுவை பல்கலையில் ஆராய்ச்சி முறை படிப்பு துவக்க விழா

புதுச்சேரி, மே 6: புதுச்சேரி பல்கலைக்கழகம், கல்வி மற்றும் மேம்பாட்டு ஆய்வுகள் நிறுவனம், சமூக உள்ளடக்க ஆய்வு மையம், சமூக அறிவியல் மற்றும் சர்வதேச ஆய்வுகள் பள்ளி ஆகியவை இணைந்து டெல்லி இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சி கவுன்சில் நிதியுதவியுடன் இளம் ஆராய்ச்சியாளர்களுக்கான 10 நாள் ஆராய்ச்சி முறை படிப்பு துவக்க விழாவை நடத்தியது.



▶ புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் நடந்த ஆராய்ச்சி முறை படிப்பு துவக்க விழாவில் துணைவேந்தர் பிரகாஷ் பாபு பேசினார்.

பல்கலைக்கழகதுணை வேந்தர் பிரகாஷ் பாபு தலைமை தாங்கி பேசினார். அப்போது, பண்டைய இந்திய மொழிகள், குறிப்பாக சமஸ்கிருதம் மற்றும் நெறிமுறை சார்ந்த ஆராய்ச்சியின் முக்கியத்துவம் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். சமூக உள்ளடக்க ஆய்வு மைய தலைவர் சிதம்பரம் வரவேற்றார். பாடநெறியின் இயக்குநரும், பேராசிரியருமான பிரபாகரன் கலந்துகொண்டு ஆராய்ச்சி முறையியல் பாடநெறியின் நோக்கங்கள் மற்றும் அவற்றின் முக்கியத்துவத்தை விரிவாக எடுத்துரைத்தார்.

கல்வி மற்றும் மேம்பாட்டு ஆய்வுகள் நிறுவனத்தின் கவுரவ பேராசிரியர் சுதாகர் வேணுகபள்ளி, இளம் ஆராய்ச்சியாளர்களுக்கான கல்வி முயற்சிகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி பேசினார். ஆய்வுகள், கல்வி மற்றும் கிராமப்புற மறுசீரமைப்புப் பிரிவின் இயக்குநர் தரணிக்கரசு, மேற்கத்திய மற்றும் இந்திய ஆராய்ச்சி அணுகுமுறைகளின் வேறுபாடுகள் மற்றும் உள்ளடக்கத்தின் முக்கியத்துவம் குறித்து பேசினார். பேராசிரியர் தனஞ்சய் சிங் தொடக்க உரையில், துறைகளுக்கு இடையேயான சமூக அறிவியல் ஆராய்ச்சி, வழிமுறைகள் மற்றும் நியாய தத்துவத்தின் முக்கியத்துவம் குறித்து பேசினார். பேராசிரியர் அஞ்சல் குமாரி நன்றி கூறினார்.

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

DINAMALAR DATED 06.05.2025

# பாரம்பரிய மருத்துவத்தை மேம்படுத்த புதுவை பல்கலைக்கழகம் ஒப்பந்தம்



புதுச்சேரி மே 6: பாரம்பரிய மருத்துவத்தை மேம்படுத்தும் வகையில் புதுவை மத்திய பல்கலைக்கழகம், ஆயுஷ் இயக்ககத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை திங்கள்கிழமை மேற்கொண்டது (படம்).

ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு மற்றும் பாரம்பரிய மருத்துவம் உள்ளிட்ட துறைகளில் கல்வி மற்றும் தொழில்துறை ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில், புதுவை மத்தியப் பல்கலைக்கழகம், மத்திய அரசின் ஆயுஷ் இயக்ககம், புதுவை மருந்துகளின் கட்டுப்பாட்டுத் துறை ஆகியவை புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டன. புதுவை மத்திய பல்கலைக்கழகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் புதுவை பல்கலைக்கழகத் துணைவேந்தர் பிரகாஷ் பாபு, மத்திய அரசின் ஆயுஷ் இயக்குநர் ஸ்ரீதரன் ஆகியோர் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையொப்பமானது.

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

THILAI MALAI DATED 06.05.2025

RNI No. PONBIL/2021/82208
Email: thillaimaildaily@gmail.com
THILLAI MAIL
தில்லை மெயில்
மலர் : 4 இதழ் : 323
VOLUME: 4 ISSUE: 323
தினசரி காலை நாளிதழ்
4 பக்கம் ரூ.500 காசு
புதுச்சேரி (6-5-2025) செவ்வாய்க்கிழமை
PUDUCHERRY(6-5-2025) TUESDAY
செய்திக்கு:94426 34795

SRI ANNAMALAIYAR ACTING DRIVERS
Good Driver
BEST SERVICE
D.K.Kumar
PUDUCHERRY
860 860 5550 94432 55788
புதுவையின் புகழ் பெற்ற ஸ்தாபனம்
கௌதம் ஜீவல்லரி
ஹோல்சேல் கடை
916 HALLMARK SHOWROOM

# புதுச்சேரி ஆயுஷ் இயக்ககம், மருந்துகளின் கட்டுப்பாட்டு துறை ஆராய்ச்சி, கண்டுபிடிப்புகளுக்காக பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம்

புதுச்சேரி, மே 6–

ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு மற்றும் பாரம்பரிய மருத்துவம் உள்ளிட்ட துறைகளில் கல்வி மற்றும் தொழில்துறை ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கத்தில், புதுவைப் பல்கலைக்கழகம் மற்றும் புதுச்சேரி அரசு ஆயுஷ் இயக்ககம், மருந்துகளின் கட்டுப்பாட்டு துறை நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டுள்ளன.




இந்த கூட்டாண்மையின் கீழ், புதுவைப் பல்கலைக்கழகத்தின் வேதியியல் துறை முக்கியப் பங்காற்றும். பல்கலைக்கழகத்தில் மூவகை அமைப்புகளின் முக்கிய அதிகாரிகள், பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் நடைபெற்றது.

பல்கலைக்கழக துணைவேந்தர் பிரகாஷ் பாபு பேசுகையில்:

"இந்த ஒப்பந்தம் கல்விசார் நுண்ணறிவும், அரசின் ஒழுங்குமுறை அனுபவமும் இணைந்துள்ள ஒரு முக்கிய முயற்சியாகும். ஆயுர்வேதம், யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி ஆகிய ஆயுஷ் மருத்துவத் துறைகளில் மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் ஈடுபடக்கூடிய வாய்ப்புகளை இது உருவாக்கும்" என்றார்.

அயுஷ் இயக்கத்தின் இயக்குநர் மற்றும் மாநில மூலிகைத் தாவரங்கள் வாரியத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான டாக்டர் ஸ்ரீதரன் "இந்த ஒப்பந்தம் ஆய்வக அறிவையும் நடைமுறை பயன்பாடுகளையும் இணைக்கும் பாலமாக செயல்படும். நமது பரிசோதனை வசதிகள் மற்றும் ஒழுங்குமுறை அனுபவங்களை பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் ஆராய்ச்சி வளங்களுடன் இணைத்து, செயல்திறன் வாய்ந்த சுகாதார தீர்வுகளை விரைவாக உருவாக்க முடியும்" என்று கூறினார்.

மருந்துகளின் கட்டுப்பாட்டு துறையின் கட்டுப்பாட்டு மற்றும் உரிமம் வழங்கும் அதிகாரியான டாக்டர் ஈ. ஆனந்தகிருசணன் "இந்த ஒப்பந்தம் ஆயுஷ் துறையில் புதுமை மற்றும் வளர்ச்சிக்கான முக்கிய கட்டமாகும். தரமான, பாதுகாப்பான மற்றும் செயல்திறன் வாய்ந்த மருந்துகளின் கிடைப்பை உறுதி செய்வதில் இது துணையாக அமையும்" என்று கூறினார்.

சர்வதேச தொடர்புகள் துறையின் பேராசிரியர் விக்டர் ஆனந்த்குமார், வேதியியல் துறையின் தலைவர் சிவசங்கர், வேதியியல் பேராசிரியர் பாலா மணிமாறன் ஆகியோர் கலந்து கொண்டனர்.